# செங்கல்பட்டு நகராட்சி

## <u>சாதாரண கூட்டம்</u>

**<u>2019ம் ஆண்டு மே மாதம் 31ம் தேதி பிற்பகல் 2.30 மணியளவில் செங்கல்பட்டு நகராட்சி ஆணையர் மற்றும் தனி அலுவலர் முன்னிலையில் நடைபெற்ற கூட்டம்.</u>**

---

**பொருள்.1**

செங்கல்பட்டு நகராட்சி ஆணையர் அவர்களின் 4/2019 ஆம் மாதத்திற்கான நாட்குறிப்பு மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது

**தீர்மான எண். 793 நாள் 31.05.2019**

பதிவு செய்யபட்டது

**பொருள்.2**

செங்கல்பட்டு நகராட்சி பொறியாளர் அவர்களின் 4/2019 ஆம் மாத்திற்கான நாட்குறிப்பு மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது

**தீர்மான எண். 794 நாள் 31.05.2019**

பதிவு செய்யபட்டது

**பொருள்.3**

செங்கல்பட்டு நகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டு எண்.1, ஜெ.சி.கே.நகரில் உள்ள பூங்கா மற்றும் விளையாட்டுத்திடல் பொது மக்கள் பயன்படுத்தும் வகையில் அமைப்பதற்கு தயாரிக்கப்பட்ட மதிப்பீடு ரூ.75.00 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அ.கு–**

1. மன்றம் அனுமதி வழங்கலாம்.
2. அரசு மான்யம் பெற்று பணி மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மான எண். 795 நாள் 31.05.2019**

அலுவலகக் குறிப்பு அனுமதி வழங்கப்பட்டது

**பொருள்.4**

செங்கல்பட்டு நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதிகளில் எதிர்வரும் கோடைகாலத்தை கருத்தில் கொண்டு நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் நீர் இருப்புடன் பராமரிப்பில்லாமல் உள்ள ஆறு கிணறுகளை துார்வாரி சீரமைத்து, மோட்டார் பொறுத்தி பிளாஸ்டிக் தொட்டி அமைக்கவும், 9 இடங்களில் புதியதாக ஆழ்துளை கிணற்றுடன் கூடிய சிறுமின் விசை பம்புடன் பிளாஸ்டிக் தொட்டி அமைக்கும் பணிக்கு ரூ.49.60 இலட்சத்திற்கு மதிப்பீடு தயாரிக்கப்பட்டு மன்றப் பொருள் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அ.கு–**

1. மன்றம் அனுமதி வழங்கலாம்
2. வறட்சி நிதியில் பணி மேற்கொள்ளவும் அனுமதிக்கலாம்.

**தீர்மான எண். 796 நாள் 31.05.2019**

அலுவலகக் குறிப்பு அனுமதி வழங்கப்பட்டது

**பொருள்.5**

காஞ்சிபுரம் மாவட்ட ஆட்சியர், மற்றும் செங்கல்பட்டு வருவாய் கோட்டாட்சியர் ஆகியோரின் உத்திரவின்படி செங்கல்பட்டு நகராட்சிக்குட்பட்ட புனித ஜோசப் மேல்நிலைப்பள்ளியில் பாராளுமன்ற தேர்தலுக்காக தேர்தல் பயிற்சி அலுவலர்களுக்கு தேவையான உணவு, தேநீர் மற்றும் பிஸ்கெட் வழங்கும் பணிக்கு ரூ.4.50 இலட்சத்திற்கு விலைப்புள்ளி கோரப்பட்டதின் விவரம் பின் வருமாறு

| வ.எண் | பணியின் பெயர் | மதிப்பீடு | ஒப்பந்தபுள்ளி விவரம் |
|---|---|---|---|
| 1. | செங்கல்பட்டு நகராட்சிக்குட்பட்ட புனித ஜோசப் மேல்நிலைப்பள்ளியில் பாராளுமன்ற தேர்தலுக்காக தேர்தல் பயிற்சி பெறும் அலுவலர்களுக்கு தேவையான உணவு, தேநீர் மற்றும் பிஸ்கெட் வழங்கும் பணி. (1900 நபர்கள்) | ரூ.4.50 இலட்சம் | 1.திருகே. வெங்கடேசலு 1.07 % குறைவு<br>2.திரு.இ.சந்திரன் 0.20 % அதிகம் |

**அ.கு–**

1. மன்றம் ஏற்கலாம்

2. குறைந்த விலைப்புள்ளி அளித்துள்ள ஒப்பந்ததாரருக்கு மன்றத்தின் அனுமதியை எதிர்நோக்கி தனி அலுவலரின் முன் அனுமதி பெற்று பணி உத்தரவு வழங்க மன்றம் அனுமதிக்கலாம்.

3. பாராளு மன்ற தேர்தல் பணியின் அவசியம் கருதி குறைந்த விலைப்புள்ளி அளித்த ஒப்பந்த தாரரிடமிருந்து காப்புறுதி தொகை பட்டியலில் பிடித்தம் செய்ய அனுமதிக்கலாம்.

**தீர்மான எண். 797 நாள் 31.05.2019**

அலுவலகக் குறிப்பு அனுமதிக்கப்பட்டது.

**பொருள்.6**

செங்கல்பட்டு நகராட்சி பொறியியல் பிரிவில் பல்வேறு பணிகள் பொது ஏல முறையில் மற்றும் ஒப்பந்தபுள்ளிகள் பெற்று செயல்படுத்துவதற்கு பத்திரிக்கையில் விளம்பரம் செய்யப்பட்டுள்ளது. இதற்கு பத்திரிக்கை நிறுவனங்களிடமிருந்து அதற்கான பில் பட்டியல்கள் பெறபட்டு உள்ளதால், இதற்கு செலவினமாகும் தொகை ரூ.10.00 இலட்சம் விளம்பர தொகையினை பொது நிதியிருந்து செலவினம் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதிப் பெற்று நடவடிக்கை மேற்கொள்ள மன்றப் பொருள் ஒப்பதலுக்கு பணிந்தனுப்பப்படுகிறது.

(ந.க.எண்.3121/2016/இ1 நாள்.14.06.2018)

**அ.கு—**

மன்றம் அனுமதி வழங்கலாம்

**தீர்மான எண். 798 நாள் 31.05.2019**

அலுவலகக் குறிப்பு அனுமதி வழங்கப்பட்டது

**பொருள்.7**

செங்கல்பட்டு நகராட்சிக்கு சொந்தமான பழவேலி, திம்மாவரம், மாமண்டுர் ஆகிய குடிநீர் தலைமை நிறேற்றும் நிலையங்களில் இரவு நேரத்தில் இருள் சூழ்ந்து காணப்படுவதால். அதற்கான புதிய மின்விளக்கு கம்பங்கள் மற்றும் தெளிவான ஒளி தரக்கூடிய LED விளக்கு 10 எண்ணிக்கை அமைக்க உத்தேச செலவின ரூ.2.00/— இலட்சத்திற்கு மன்ற பொருள் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அ.கு—**

1. மன்றம் ஏற்கலாம்
2. மேற்படி பணிக்கான செலவினை பொது நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் ஏற்கலாம்.

**தீர்மான எண். 799 நாள் 31.05.2019**

அலுவலகக் குறிப்பு ஏற்கப்பட்டது.

**பொருள்.8**

காஞ்சிபுரம் மாவட்ட ஆட்சியர், மற்றும் செங்கல்பட்டு வருவாய் கோட்டாட்சியர் ஆகியோரின் உத்திரவின்படி செங்கல்பட்டு நகராட்சிக்குட்பட்ட புனித ஜோசப் மேல்நிலைப்பள்ளியில் பாராளுமன்ற தேர்தலுக்காக தேர்தல் பயிற்சி அலுவலர்களுக்கு தேவையான உணவு, தேநீர் மற்றும் பிஸ்கெட் வழங்கும் பணிக்கு ரூ.3.60 இலட்சத்திற்கு விலைப்புள்ளி கோரப்பட்டதின் விவரம் பின்வருமாறு.

| வ.எண் | பணியின் பெயர் | மதிப்பீடு | ஒப்பந்தபுள்ளி விவரம் |
|---|---|---|---|
| 1. | செங்கல்பட்டு நகராட்சிக்குட்பட்ட புனித ஜோசப் மேல்நிலைப்பள்ளியில் பாராளுமன்ற தேர்தலுக்காக தேர்தல் பயிற்சி அலுவலர்களுக்கு தேவையான உணவு, தேநீர் பிஸ்கெட் வழங்கும் பணி. | ரூ.3.60 இலட்சம் | 1.திருகே. வெங்கடேசலு 1.00 % குறைவு 2.திரு.இ.சந்திரன் 4.39 % அதிகம் |

**அ.கு—**

1. மன்றம் ஏற்கலாம்

2. குறைந்த விலைப்புள்ளி அளித்த ஒப்பந்ததாரருக்கு மன்றத்தின் அனுமதியை எதிர்நோக்கி தனி அலுவலரின் முன் அனுமதி பெற்று பணி உத்தரவு வழங்க மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மான எண். 800 நாள் 31.05.2019**

அலுவலகக் குறிப்பு அனுமதிக்கப்பட்டது.

**பொருள்.9**

செங்கல்பட்டு நகராட்சியின் 2018—19 ஆம் ஆண்டிற்கான நிர்வாக அறிக்கையினை தயார் செய்து மன்றத்தின் பார்வைக்கும், ஒப்புதலுக்கும் வைக்கப்படுகிறது.

**அ.கு—**

மன்றம் ஒப்புதல் அளிக்கலாம்.

**தீர்மான எண். 801 நாள் 31.05.2019**

அலுவலகக் குறிப்பு ஒப்புதல் அளிக்கப்பட்டது.

**பொருள்.10**

நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர் செங்கல்பட்டு அவர்களின் ந.க.எண்.440/2015/அ4, நாள்.12.12.2018 நாளிட்ட கடிதத்தில் தெரிவித்துள்ளவாறு செங்கல்பட்டு நகராட்சி மூலம் இந்திய செஞ்சிலுவை சங்கத்திற்கு 2018–19 ம் ஆண்டுக்கு செலுத்தப்பட வேண்டிய சந்தா தொகை ரூ.2500/– ஐ செலுத்த மன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது.

அ.கு–

மன்றம் அனுமதி வழங்கலாம்

**தீர்மான எண். 802 நாள் 31.05.2019**

அலுவலகக் குறிப்பு அனுமதி வழங்கப்பட்டது

**பொருள்.11**

செங்கல்பட்டு நகராட்சியில் ஒட்டுனராக பணிபுரியும் திரு.P. கோட்டீஸ்வரன் மற்றும் திரு.M. திருநிலகண்டன் என்பவர்கள் 20 ஆண்டுகள் மாசற்ற முறையில் விபத்துகள் இன்றி பணி முடித்ததற்கு அரசாணை எண்.204, நாள்.01.10.1997 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறையின் படி தங்கம் பதக்கம் மற்றும் நற்சான்று வழங்கவும் அதற்கான செலவு ரூபாய் 34,200/– ஐ தமிழ்நாடு கைவினைப் பொருள் வளர்ச்சி கழகம் சென்னை–2 க்கு செலுத்த மன்றத்தின் ஒப்புதலுக்கு வைக்கப்படுகிறது.

**அ.கு–**

மன்றம் அனுமதி வழங்கலாம்.

**தீர்மான எண். 803 நாள் 31.05.2019**

அலுவலகக் குறிப்பு அனுமதி வழங்கப்பட்டது

**பொருள்.12**

செங்கல்பட்டு நகராட்சிக்கு உட்பட்ட பகுதியில் உள்ள தெற்கு இரயில்வே செங்கல்பட்டு இரயில்வே சந்திப்பில் (Bulk wasle Generator) திடக்கழிவு மேலாண்மைக்கான உரம் தயாரிக்கும் இடம் கட்டப்பட்டு வருகிறது. மேற்படி உரக்கிடங்கு தயாராகும் வரை மக்கும் குப்பைகளை இந்நகராட்சி உரக்கிடங்கில் சேமிக்கவும், மக்கா குப்பைகளுக்கு மட்டும் SVC charge (Solite usage charge) வசூலிக்க வேண்டியுள்ளது. மேலும் மேற்கண்ட இரயில்வே

நிலைய கட்டிடங்களுக்கு சொத்துவரி ஏதும் விதிக்கப்படவில்லை. எனவே மாற்று தலைப்பில் SVC Charge கட்டணம் வசூல் செய்யவும் மற்றும் Dry waste-க்கு ஒரு மாத SVC கட்டணம் ரூ.3000/– ம் என நிர்ணயம் செய்யவும் Wet waste-க்கு (அவர்கள் OCC பயன்பாட்டிற்கு வரும் வரை) அதன் பிறகு மாதாமாதம் ரூ.2,000/– ம் நிர்ணயம் செய்து வசூலிக்கவும் மன்றத்தின் பார்வைக்கும் அனுமதிக்கும் வைக்கப்படுகிறது.

**அ.கு–**

மன்றம் அனுமதி அளிக்கலாம்.

**தீர்மான எண். 804 நாள் 31.05.2019**

அலுவலகக் குறிப்பு அனுமதிக்கப்பட்டது.

**பொருள்.13**

செங்கல்பட்டு நகராட்சியின் பொது சுகாதாரப் பிரிவில் தினசரி குப்பைகள் அள்ள பயன்படும் மினி லாரி TN 19J 2464–க்கு மே–2019 ஆம் மாதம் தகுதி சான்று பெறவேண்டி உள்ளதால் அதில் உள்ள பழுதுகளை சரிசெய்ய ஆகும் தோராய செலவினம் தொகை ரூ.1,50,000/– க்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அ.கு–**

**1)** அனுமதி வழங்கலாம்

**2)** பொது சுகாதார வாகனம் என்பதால் மன்ற ஒப்புதலை எதிர் நோக்கி தனி அலுவலர் அவர்கள் முன் அனுமதி பெற்று நடவடிக்கை மேற்கொள்ள மன்றம் அங்கீகரிக்கலாம்.

**தீர்மான எண்.805 நாள் 31.05.2019**

அலுவலகக் குறிப்பு அனுமதிக்கப்பட்டது.

**பொருள்.14**

செங்கல்பட்டு நகராட்சி சொந்தமான மாமண்டூர் நிரேற்று நிலையத்தில் உள்ள 60 HP, 15 HP, 10 HP, 5 HP, மின்மோட்டர், பம்பு செட்டுகள் (Starter) மற்றும் ஸ்டாட்டர் ஆகியவற்றை இயக்கும் பணிக்கு நகராட்சியில் பணியாளர்கள் பற்றாக் குறை காரணமாக, தனியார் மூலமாக கடந்த நான்கு ஆண்டுகளாக இயக்கப்பட்டு வருகிறது. பொது மக்களுக்கு

சீராக குடிநீர் விநியோகிக்கும் பொருட்டு ஏற்கனவே நகர மன்ற தீர்மானம் எண்.454, நாள்.27.05.2018 ல் அனுமதி அளித்துள்ளது. அதன் அடிப்படையில் தற்போது பம்ப் ஆப்ரேட்டர் 3 எண்ணிக்கை மற்றும் Maintance Assistants 3 எண்ணிக்கையில் ஆட்களை நியமித்து 2019–20 ஆம் ஆண்டிற்கு தோராய செலவினம் ரூ.9.80/– இலட்சத்தில் பணிகள் மேற்கொள்ள அவசரம் கருதி ஆணையர் (ம) தனி அலுவலர் அவர்களின் அனுமதி பெற்று தற்போது பணியினை மேற்கொண்டிருக்கும் ஒப்பந்தாரருக்கே ஏற்கனவே வழங்கப்பட்ட ஒப்பந்தபுள்ளி விகிதத்தில் (ந.ம.தீ எண்.454 நாள்.27.05.2018 அனுமதிக்கப்பட்ட) பணியினை மேற்கொள்ளவும் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அ.கு–

1. மன்றம் அனுமதி அளிக்கலாம்

2. மேற்கண்ட பணிக்கான செலவினம் குடிநீர் நிதியில் இருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மான எண்.806 நாள் 31.05.2019**

அலுவலகக் குறிப்பு அனுமதிக்கப்பட்டது.

**பொருள்.15**

செங்கல்பட்டு நகராட்சி எல்லைக்குட்பட்ட தெருவிளக்குகள் வார்டு எண் 1 முதல் 6 வரையுள்ள 504 எண்ணிக்கையினை நகராட்சியின் பணியாளர் 1 ஒயர்மேன், 1 ஒயர்மேன் உதவியாளர் கொண்டு பராமரிக்கவும், மேலும் அலுவலக வளாகம், Computer centre, சுகாதார மையம் ஆகிய வார்டுகளையும் தெருவிளக்கு நகராட்சி பணியாளர் மூலமாக பராமரிக்க வேண்டி அதற்கான 2019–2020 ஆம் நிதியாண்டிற்கு தேவையான மின் உதிரிப் பொருட்கள் கொள்முதல் செய்ய தோராய செலவினம் ரூ.8.00/– இலட்சத்திற்கு மன்றம் பொருள் வைக்க மன்ற அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அ.கு–

1. மன்றம் அனுமதி அளிக்கலாம்

2. மேற்கண்ட செலவினம் பொது நிதிலிருந்து மேற்கொள்வதை மன்றம் ஏற்கலாம்.

**தீர்மான எண்.807 நாள் 31.05.2019**

அலுவலகக் குறிப்பு அனுமதிக்கப்பட்டது.

**பொருள்.16**

இந்நகராட்சிக்குட்பட்ட வார்டு எண் 1 ல் VPC சிங் நகர் பகுதியில் பொது மக்களின் குடிநீர் அவசர அவசியம் கருதி குடிநீர் பகிர்மானம் குழாய் அமைக்க தோராய செலவு ரூ.1.00 இலட்சம் மதிப்பீட்டிற்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அ.கு–**

1. மன்றம் அனுமதி கோரலாம்

**தீர்மான எண்.808 நாள் 31.05.2019**

அலுவலகக் குறிப்பு அனுமதிக்கப்பட்டது.

**பொருள்.17**

இந்நகராட்சிக்குட்பட்ட ராமபாளையம் பகுதிகளுக்கு குடிநீர் பகிர்மானம் குழாய் அமைக்க வேண்டியுள்ளது. மேற்படி பணிகளுக்கு தோராய செலவு ரூ.1.30 இலட்சம் மதிப்பீட்டிற்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

ந.க.எண்.1013/2019/இ2

**அ.கு–**

1. மன்றம் அனுமதி அளிக்கலாம்

**தீர்மான எண்.809 நாள் 31.05.2019**

அலுவலகக் குறிப்பு அனுமதிக்கப்பட்டது.

**பொருள்.18**

செங்கல்பட்டு நகராட்சி எல்லைக்குட்பட்ட குடியிருப்புகளுக்கு குடிநீர் விநியோகம் மேற்கொள்ள பயன்படும் தலைமை நீரேற்று நிலையங்களில் இருந்து நீர் தேக்க தொட்டிகளுக்கு பயன்படுத்தப்படும் குடிநீர் பிரதான குழாய்கள் மற்றும் குடிநீர் விநியோக மேற்கொள்ள பயன்படும் குடிநீர் பகிர்மான குழாய்கள் போன்றவற்றின் குடிநீர் அடைப்பு, உடைப்பு மற்றும் கசிவு போன்றவற்றை சரிசெய்யும் பணிக்கு ரூ.9.00 இலட்சத்திற்கு பணி மேற்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அ.கு–**

1. மன்றம் அனுமதி வழங்கலாம்

**தீர்மான எண்.810 நாள் 31.05.2019**

அலுவலகக் குறிப்பு அனுமதிக்கப்பட்டது.

**பொருள்.19**

செங்கல்பட்டு நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதிகளில் உள்ள ஆழ்துளை கிணற்றுடன் கூடிய கை பம்பு மற்றும் சிறுமின்விசை பம்புடன் கூடிய ஆழ்துளை கிணறு மற்றும் வால்வுகள் பழுதினை உடனுக்குடன் சரிசெய்ய ரூ.6.00 இலட்சதிற்கு பணி மேற்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அ.கு–**

1. மன்றம் அனுமதி வழங்கலாம்

**தீர்மான எண்.811 நாள் 31.05.2019**

அலுவலகக் குறிப்பு அனுமதிக்கப்பட்டது.

**பொருள்.20**

செங்கல்பட்டு நகராட்சிக்கு துாய்மை இந்தியா திட்டத்தின் கீழ் ஏழாவது மாநில உயர் மட்ட குழுவில் நிர்வாக அனுமதி ந.க.எண்.22866/P3/2018–ல், 23.08.2018 அன்று பெறப்பட்டுள்ளது. தொழில்நுட்ப அனுமதி 24.08.2018 அன்று பெறப்பட்டு, 06.09.2018 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டுள்ளது. பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகளில் தொழில் நுட்ப தகுதி சரிபார்க்கப்பட்டு 10.09.2018 அன்று திறக்கப்பட்ட Pricebid விவரம் பின்வருமாறு.

| வ.எண் | ஒப்பந்ததாரர் விவரம் | மதிப்பீடு | பணியின் பெயர் |
|---|---|---|---|
| 1. | செங்கல்பட்டு நகராட்சி ராமபாளையம் பகுதியில் 2MT கொள்ளளவு கொண்ட நுண்ணிய பசுமை உரகுடில் அமைக்கும் பணி ரூ.30.00 இலட்சம் | 30.00 | M.சக்கிவேல் 0.44% குறைவு |
| 2. | | | M.ஞானவேல் 3.23% அதிகம் |

பணியின் அவசர அவசியம் கருதி முன்அனுமதி பெறப்பட்டு பணி மேற்கொள்ளப்பட்டது மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அ.கு–

1. மன்றம் அனுமதி வழங்கலாம்.

**தீர்மான எண்.812 நாள் 31.05.2019**

அலுவலகக் குறிப்பு அனுமதிக்கப்பட்டது.

**தனி அலுவலர்/ ஆணையர்**
**செங்கல்பட்டு நகராட்சி**